அலகு தேர்வு 7

மேல்நிலை இரண்டாம் ஆண்டு ----- கணக்குப்பதிவியல்

## பாடம் 7. நிறுமக் கணக்குகள்

காலம் : 75 நிமிடம் மதிப்பெண்கள் : 50

### பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 10 × 1 = 10

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக :

1. முகமதிப்பைவிட அதிகமாக பெற்ற தொகை வரவு வைக்கப்படும் கணக்கு
   அ) பத்திர முனைமக் கணக்கு ஆ) அழைப்பு முன்பணக் கணக்கு
   இ) பங்கு முதல் கணக்கு ஈ) பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கு

2. முன்னுரிமைப்பங்கு என்பது -----------
   (i) நிலையான விகிதத்தில் பங்காதாயம் பெறுவதற்கான முன்னுரிமையைப் பெற்ற பங்கு
   (ii) கலைப்பின்போது பங்கு முதலை திரும்பப் பெறுவதற்கான முன்னுரிமையைப் பெற்ற பங்கு
   அ) (i) மட்டும் சரியானது ஆ) (ii) மட்டும் சரியானது
   இ) (i) மற்றும் (ii) சரியானது ஈ) (i) மற்றும் (ii) தவறானவை

3. சரியான குறியீட்டைப் பயன்படுத்தி பொருத்தமான இணையை தேர்ந்தெடுக்கவும்
   (i) குறை ஒப்பம் - 1. முன்னுரிமைப்பங்குகள் அல்லாத பங்குகள்
   (ii) மிகை ஒப்பம் - 2. வெளியிட்ட பங்குகளைவிட அதிகமாக ஒப்பப்பட்டது
   (iii) நிறுமம் - 3. வெளியிட்ட பங்குகளைவிட குறைவாக ஒப்பப்பட்டது
   (iv) நேர்மை பங்குகள் - 4. பொது முத்திரை

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| அ | 1 | 2 | 3 | 4 |
| ஆ | 4 | 3 | 2 | 1 |
| இ | 3 | 2 | 4 | 1 |
| ஈ | 3 | 4 | 1 | 2 |

4. பின்வரும் வாக்கியங்களில் எது தவறானது?
   அ) வெளியிடப்பட்ட பங்கு முதல் அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதலைவிட, ஒருபோதும் அதிகமாக இருக்கக் கூடாது
   ஆ) பங்குகள் குறை ஒப்பமாக இருக்கும் நிலையில், வெளியிடப்பட்ட பங்குமுதல், ஒப்பிய பங்கு முதலைவிட குறைவாக இருக்கும்
   இ) காப்பு முதல் நிறுமத்தை கலைக்கும்போது செலுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகிறது.
   ஈ) செலுத்தப்பட்ட பங்கு முதல், அழைக்கப்பட்ட பங்கு முதலின் ஒரு பகுதி ஆகும்

5. பின் வருவனவற்றில் எது பதிவு செய்யப்பட்ட முதல் என அழைக்கப்படுகிறது?
   அ) ஒப்பிய முதல் ஆ) செலுத்தப்பட்ட முதல்
   இ) அங்கிகரிக்கப்பட்ட முதல் ஈ) அழைக்கப்பட்ட முதல்



6. ஒறுப்பிழப்பு செய்யும்போது பங்கு முதல் கணக்கு எதில் பற்று வைக்கப்படுகிறது?
   அ) முகமதிப்பு ஆ) பெயரளவு மதிப்பு
   இ) செலுத்தப்பட்ட தொகை ஈ) அழைக்கப்பட்ட தொகை

7. பொருத்துக:
   தவணை முறையில் பங்கு முதலானது கீழ்கண்டவாறு பெறப்படலாம்
   1) முதல் தவணை - i) முதல் அழைப்புத் தொகை
   2) இரண்டாம் தவணை - ii) விண்ணப்பத் தொகை
   3) மூன்றாம் தவணை - iii) ஒதுக்கீட்டுத் தொகை
   4) கடைசித் தவணை - iv) இறுதி அழைப்புத் தொகை

   அ) 1) - iii) 2) - ii) 3) - i) 4) - iv) ஆ) 1) - i) 2) - iv) 3) - iii) 4) - ii)

   இ) 1) - ii) 2) - iii) 3) - i) 4) - iv) ஈ) 1) - ii) 2) - iii) 3) - iv) 4) - i)

8. ஒறுப்பிழப்புச் செய்த பங்குகளை மறுவெளியீடு செய்த பிறகு, பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கின் இருப்பு மாற்றப்படுவது
   அ) பொதுக்காப்பு கணக்கிற்கு ஆ) முதலினக் காப்பு கணக்கிற்கு
   இ) பத்திர முனைமக் கணக்கிற்கு ஈ) உபரி கணக்கிற்கு

9. சொத்துகளை வாங்கி பங்குகள் வெளியிடும்போது வரவு வைக்கப்படும் கணக்கு
   அ) விற்பனையாளர் க/கு ஆ) பற்பல சொத்துகள் க/கு
   இ) பங்குமுதல் க/கு ஈ) வங்கி க/கு

10. ₹. 8 செலுத்தப்பட்ட, ₹. 10 மதிப்புள்ள பங்கு ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது எனில், அதன் குறைந்த அளவு மறுவெளியீட்டு விலை -------------
    அ) பங்கொன்று ₹. 10 ஆ) பங்கொன்று ₹. 8 இ) பங்கொன்று ₹. 5 (ஈ) பங்கொன்று ₹. 2

### பகுதி --- II

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 17- க்கு கட்டாயம் விடையளிக்கவும். 5 × 2 = 10

11. மிகை ஒப்பம் என்றால் என்ன?
12. பங்கு என்றால் என்ன?
13. பத்திர முனைமக் கணக்கு பற்றி சிறுகுறிப்பு வரையவும்
14. பங்குகள் ஏன் ஒறுப்பிழப்பு செய்யப்படுகின்றன?
15. ராஜன் நிறுமம் ₹. 6,00,000 மதிப்புள்ள இயந்திரத்தை ஜெகன் நிறுவனத்திடமிருந்து வாங்கியது. அது பங்கொன்று ₹.10 மதிப்புள்ள முற்றிலும் செலுத்தப்பட்ட நேர்மைப்பங்குகளை அவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைக்காக வழங்கியது. பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால், பதிய வேண்டிய குறிப்பேட்டுப்பதிவுகளைத் தரவும்.
16. கோகுல் நிறுமம் பங்கொன்று ₹. 10 வீதம் 5,000 நேர்மைப் பங்குகளை விண்ணப்பத்தின் போது முழுத்தொகையும் செலுத்தும் வகையில் வெளியிட்டது. பங்கொன்று ₹. 2 முனைமத்தில் வெளியிட்டால் குறிப்பேட்டுப் பதிவுகள் எவ்வாறு அமையும்?
17. குறை ஒப்பம் என்றால் என்ன?



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

## பகுதி --- III

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 24 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 5 × 3 = 15

18. முன்னுரிமைப் பங்குகளுக்கும், நேர்மைப் பங்குகளுக்கும் உள்ள வேறுபாடுகளை கூறவும்.

19. பங்கு முதலின் பல்வேறு பிரிவுகளை குறிப்பிடுக

20. சிறுகுறிப்பு வரைக.
    (அ) அங்கீகரிக்கப்பட்ட முதல்
    (ஆ) காப்பு முதல்

21. ரொக்கம் தவிர இதர மறுபயனுக்கு பங்கு வெளியீடு என்றால் என்ன?

22. அப்துல் வரையறு நிறுமம் ₹. 10 மதிப்புள்ள 50,000 நேர்மை பங்குகளை, அனைத்துத் தொகையும், விண்ணப்பத்துடன் செலுத்துமாறு பின்வரும் நிலைகளில் குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.
    (i) பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால்
    (ii) பங்கொன்று ₹. 3 முனைமத்தில் வெளியிட்டால்

23. அழைப்பு முன்பணம் குறித்து சுருக்கமாக எழுதவும்

24. விடுபட்ட விவரங்களைக் கொண்டு பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளை நிறைவு செய்யவும்.

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | ________________ <br> பங்கு விண்ணப்ப க/கு <br> ( ₹. 3 வீதம் 4,00,000 விண்ணப்பத் தொகை பெறப்பட்டது ) | | 12,00,000 | ______ |
| | ________________ <br> ____________ <br> ( பங்கு விண்ணப்பத் தொகையை பங்கு முதல் கணக்கிற்கு மாற்றியது ) | | ______ | ______ |

## பகுதி --- IV

எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளிக்கவும். 3 × 5 = 15

25. புராகிரஸ் வரையறு நிறுமம் 50,000 சாதாரணப் பங்குகளை, பங்குகொன்று ₹. 10 வீதம் வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ₹. 2, ஒதுக்கீட்டின் போது ₹. 4 முதலாவது அழைப்பின் போது ₹. 2 மற்றும் இரண்டாவது அழைப்பின் போது ₹. 2 செலுத்தப்பட்ட வேண்டும். அனைத்து பங்குகளும் ஒப்பப்பட்டன மற்றும் அனைத்து தொகைகளும் முறையாக பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்



26. விஸ்வநாத் அறைகலன் வரையறு நிறுமம், ஒன்று ₹. 10 வீதம் 20,000 பங்குகளை பங்கொன்றிற்கு ₹. 2 முனைமத்தில் வெளியிட அழைப்பு விடுத்தது.
    ₹. 2 விண்ணப்பத்தின் மீதும்
    ₹. 5 ( முனைமம் உள்பட) ஒதுக்கீட்டின் மீதும்
    ₹. 5 முதலாம் மற்றும் இறுதி அழைப்பின் மீதும்
    மிகை ஒப்பமாக 30,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. கூடுதலாக பெறப்பட்ட விண்ணப்பங்கள் இயக்குனர்களால் நிராகரிக்கப்பட்டன. அனைத்துத் தொகையும் பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

27. சம்பத் நிறுமம் 25,000 நேர்மைப் பங்குகளை, பங்கு ஒன்று ₹. 10 என பொதுமக்களுக்கு வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ₹. 3, ஒதுக்கீட்டின் போது ₹. 4, முதல் மற்றும் இறுதி அழைப்பின் போது ₹. 3 செலுத்தப்பட வேண்டும். பொது மக்களால் 24,000 பங்குகள் ஒப்பப்பட்டன. இயக்குனர்கள் அனைத்து பங்குகளையும் ஒதுக்கீடு செய்தனர். அதற்காக தொகை முழுவதும் முறையாகப் பெறப்பட்டன. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

28. சரண்யா வரையறு நிறுமம் பங்கு ஒன்றின் மதிப்பு ₹. 10 வீதம், 20,000 நேர்மைப் பங்குகளை முகமதிப்பில் பொதுமக்களுக்கு வெளியிட்டது. பங்குகளுக்கானத் தொகை கீழ்கண்டவாறு செலுத்தப்படவேண்டும்.
    விண்ணப்பத்தின் போது ₹. 3
    ஒதுக்கீட்டின் போது ₹. 4
    முதல் மற்றும் இறுதி அழைப்பின் போது ₹. 3
    30,000 பங்குகளுக்கான தொகை விண்ணப்பத்தின் போது பெறப்பட்டது. கூடுதலான விண்ணப்பத் தொகை திருப்பி, உடனடியாக அனுப்பப்பட்டது. இதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

29. பாரடைஸ் வரையறு நிறுமம் ₹. 4,40,000 மதிப்புள்ள சொத்துகளை சுகுணா அறைகலன் வரையறு நிறுவனத்திடமிருந்து வாங்கியது. இதற்குப் பதிலாக ₹. 10 மதிப்புள்ள முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளை செலுத்தி நிறைவு செய்தனர். பின்வரும் சூழலுக்கான பதிவுகளைத் தரவும்.
    அ) பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால்
    ஆ) பங்குகளை 10% முனைமத்தில் வெளியிட்டால்



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

**விடைக்குறிப்பு** **அலகு தேர்வு 7**

**மேல்நிலை இரண்டாம் ஆண்டு ----- கணக்குப்பதிவியல்**

# பாடம் 7. நிறுமக் கணக்குகள்

1. அ) பத்திர முனைமக் கணக்கு
2. இ) (i) மற்றும் (ii) சரியானது
3. இ) 3 2 4 1
4. ஆ) பங்குகள் குறை ஒப்பமாக இருக்கும் நிலையில், வெளியிடப்பட்ட பங்குமுதல், ஒப்பிய பங்கு முதலைவிட குறைவாக இருக்கும்
5. இ) அங்கிகரிக்கப்பட்ட முதல்
6. ஈ) அழைக்கப்பட்ட தொகை
7. இ) 1) - ii) 2) - iii) 3) - i) 4) - iv)
8. ஆ) முதலினக் காப்பு கணக்கிற்கு
9. இ) பங்குமுதல் க/கு
10. (ஈ) பங்கொன்று ₹. 2

## பகுதி --- II

**11. மிகை ஒப்பம் என்றால் என்ன?**

- வெளியிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையை விட, விண்ணப்பிக்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் அது மிகை ஒப்பம் எனப்படும்.

**12. பங்கு என்றால் என்ன?**

- ஒரு நிறுமத்தின் முதல், குறிப்பிட்ட பண மதிப்பிலான சிறிய அலகுகளாகப் பிரிக்கப்படுவதையே 'பங்குகள்' என அழைக்கப்படுகின்றன.

**13. பத்திர முனைமக் கணக்கு பற்றி சிறுகுறிப்பு வரையவும்.**

- ஒரு நிறுமம், தனது முகமதிப்பில் உள்ள பங்கின் மதிப்பினை, அதிகரித்து வெளியிடுவது பங்கு முனைமம் ஆகும்.
- மிகுதியான தொகை முனைமம் என்று அழைக்கப்படுகின்றது

**14. பங்குகள் ஏன் ஒறுப்பிழப்பு செய்யப்படுகின்றன?**

- பங்குதாரர் ஒருவர், ஒதுக்கீட்டு பணத்தையோ அல்லது அழைப்புப் பணத்தையோ செலுத்தத் தவறினால், அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்படும்.

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

15.

## ராஜன் நிறுமத்தின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | இயந்திரம் க/கு ப<br>ஜெகன் நிறுவன க/கு<br>( இயந்திரம் வாங்கியது ) | | 6,00,000 | <br>6,00,000 |
| | ஜெகன் நிறுவன க/கு ப<br>பங்குமுதல் க/கு<br>( பங்கொன்று ₹. 10 வீதம்60,000 முற்றிலும் செலுத்தப்பட்ட பங்குகளை வெளியிட்டது ) | | 6,00,000 | <br>6,00,000 |

16.

## கோகுல் நிறுமத்தின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு (5,000 x 12 ) ப<br>பங்கு விண்ணப்ப க/கு<br>( விண்ணப்பத் தொகை பெறப்பட்டது ) | | 60,000 | <br>60,000 |
| | பங்கு விண்ணப்ப க/கு ப<br>பங்கு முதல் க/கு (5,000 x 10 )<br>பத்திர முனைமம் க/கு (5,000 x 2 )<br>( விண்ணப்பத் தொகை மாற்றப்பட்டது ) | | 60,000 | <br>50,000<br>10,000 |

17. குறை ஒப்பம் என்றால் என்ன?

- வெளியிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையைவிட ஒப்பப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தால் அது குறை ஒப்பம் எனப்படும்.

## பகுதி --- III

18. முன்னுரிமைப் பங்குகளுக்கும், நேர்மைப் பங்குகளுக்கும் உள்ள வேறுபாடுகளை கூறவும்.

| வ.எண் | முன்னுரிமைப் பங்குகள் | நேர்மைப் பங்குகள் |
|---|---|---|
| 1 | பிறவகையான பங்குகள் பெற்றிருக்கும் உரிமைகளை விட, சிலவற்றில் முன்னுரிமைப் பெற்றிருக்கும் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள் எனப்படுகின்றன. | முன்னுரிமைப் பங்குகள் அல்லாத பங்குகள் நேர்மைப்பங்குகள் ஆகும் |
| 2 | நிறுமத்தின் வாழ்நாள் முழுவதும் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் பங்காதாயம், இதில் பெறமுடியும். | இதில், பங்காதாயம் நிலையாக இருப்பதில்லை |
| 3 | நிறும கலைப்பின் போது, பங்குதாரர்களுக்கு முதலை திரும்ப செலுத்த வேண்டும் | நிறும கலைப்பின் போது, முன்னுரிமை பங்குதாரர்களுக்கு, முதலை திரும்ப செலுத்திய பிறகே, நேர்மை பங்குதாராா்களுக்கு செலுத்தப்படும். |

19. பங்கு முதலின் பல்வேறு பிரிவுகளை குறிப்பிடுக.

(i) அங்கீகரிக்கப்பட்ட முதல்
(ii) வெளியிட்ட முதல்
(iii) ஒப்பிய முதல்
(iv) அழைக்கப்பட்ட முதல்
(v) செலுத்தப்பட்ட முதல்
(vi) காப்பு முதல்

20. சிறுகுறிப்பு வரைக.

(அ) அங்கீகரிக்கப்பட்ட முதல்
(ஆ) காப்பு முதல்

(அ) <u>அங்கீகரிக்கப்பட்ட முதல்</u>

- ❖ இது அமைப்பு முறையேட்டின் படி அங்கீகரிக்கப்பட்ட முதல் ஆகும்.
- ❖ இது அதிகப்பட்சமாக முதலாக திரட்ட அனுமதிக்கப்பட்ட தொகை.
- ❖ இதனைப் ‘ பதிவு செய்யப்பட்ட முதல் ’ அல்லது ’ பெயரளவு முதல் ‘ என்றும் கூறலாம்.

(ஆ) <u>காப்பு முதல்</u>

- ❖ ஒரு நிறுமம் அதன் கலைப்பின்போது மட்டும், அழைப்பு விடுக்கலாம் என ஒதுக்கி வைத்துள்ள, ஒப்பிய முதலின் ஒரு பகுதியினை ’காப்பு முதல்’ என்று அழைக்கலாம்.

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

21. ரொக்கம் தவிர இதர மறுபயனுக்கு பங்கு வெளியீடு என்றால் என்ன?

- நிறுமம், நிலம் மற்றும் கட்டடம், இயந்திரம் போன்ற நிலைச் சொத்துகளை வாங்கும்போது, பங்குகளை ரொக்கத்திற்கு அல்லாத மறுபயனுக்காக வெளியிடுவதையே, ரொக்கம் தவிர, இதர மறுபயனுக்கு பங்கு வெளியீடு எனப்படுகின்றது.

22. அப்துல் வரையறு நிறுமத்தின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

(i) பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால்

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு (50,000 x 10 ) ப<br>பங்கு விண்ணப்ப க/கு<br>( விண்ணப்பத் தொகை பெறப்பட்டது ) | | 5,00,000 | 5,00,000 |
| | பங்கு விண்ணப்ப க/கு ப<br>பங்கு முதல் க/கு<br>( விண்ணப்பத் தொகை மாற்றப்பட்டது ) | | 5,00,000 | 5,00,000 |

(ii) பங்குகளை முனைமத்தில் வெளியிட்டால்

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு (50,000 x 13 ) ப<br>பங்கு விண்ணப்ப க/கு<br>( விண்ணப்பத் தொகை பெறப்பட்டது ) | | 6,50,000 | 6,50,000 |
| | பங்கு விண்ணப்ப க/கு ப<br>பங்கு முதல் க/கு<br>பத்திர முனைமம் க/கு (50,000 x 3 )<br>( விண்ணப்பத் தொகை மாற்றப்பட்டது ) | | 6,50,000 | 5,00,000<br>1,50,000 |



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

23. அழைப்பு முன்பணம் குறித்து சுருக்கமாக எழுதவும்.

- பங்கின் அழைக்கப்பட்ட மதிப்பைவிட, அதிகமாகப் பெறப்பட்ட தொகை, அழைப்பு முன்பணம் எனப்படும்.
- இது பங்கு விண்ணப்பம் அல்லது பங்கு ஒதுக்கீடு அல்லது பங்கு அழைப்புக் கணக்கில் அதிகமாக பெறப்பட்ட தொகையாகும்.
- அவ்வாறு அதிகமாகப் பெறப்பட்ட தொகையை, திருப்பி அளிக்க வேண்டும் அல்லது எதிர்காலத்தில் செலுத்தவேண்டிய தொகைகளில் சரிக்கட்ட வேண்டும்.

24. **குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ப<br>பங்கு விண்ணப்ப க/கு<br>( ₹. 3 வீதம் 4,00,000 விண்ணப்பத் தொகை பெறப்பட்டது ) | | 12,00,000 | 12,00,000 |
| | பங்கு விண்ணப்ப க/கு ப<br>பங்கு முதல் க/கு<br>( பங்கு விண்ணப்பத் தொகையை பங்கு முதல் கணக்கிற்கு மாற்றியது ) | | 12,00,000 | 12,00,000 |

## பகுதி --- IV

25. **புராகிரஸ் வரையறு நிறுமத்தின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ( 50,000 x 2 ) ப<br>பங்கு விண்ணப்ப க/கு<br>( விண்ணப்பத்தொகை பெற்றது ) | | 1,00,000 | 1,00,000 |
| | பங்கு விண்ணப்ப க/கு (50,000 x 2) ப<br>பங்கு முதல் க/கு<br>( பங்கு விண்ணப்பத் தொகையை பங்கு முதல் கணக்கிற்கு மாற்றியது ) | | 1,00,000 | 1,00,000 |
| | பங்கு ஒதுக்கீட்டு க/கு ( 50,000 x 4 ) ப<br>பங்கு முதல் க/கு<br>( ஒதுக்கீட்டுத் தொகை பெற வேண்டியது ) | | 2,00,000 | 2,00,000 |
| | வங்கி க/கு ப<br>பங்கு ஒதுக்கீட்டு க/கு | | 2,00,000 | 2,00,000 |



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

| | | | | |
|---|---|---|---|---|
| | ( ஒதுக்கீட்டுத் தொகை பெற்றது ) | | | |
| | பங்கு முதல் அழைப்பு க/கு (50,000 x 2) ப<br>பங்கு முதல் க/கு<br>( பங்கு முதல் அழைப்பு தொகை பெற வேண்டியது ) | | 1,00,000 | 1,00,000 |
| | வங்கி க/கு ப<br>பங்கு முதல் அழைப்பு க/கு<br>( பங்கு முதல் அழைப்பு தொகை பெற்றது ) | | 1,00,000 | 1,00,000 |
| | பங்கு இரண்டாவது அழைப்பு க/கு(50,000 x 2) ப<br>பங்கு முதல் க/கு<br>( பங்கு மீதான இரண்டாவது அழைப்பு தொகை பெற வேண்டியது ) | | 1,00,000 | 1,00,000 |
| | வங்கி க/கு ப<br>பங்கு இரண்டாவது அழைப்பு க/கு<br>( பங்கு மீதான இரண்டாவது அழைப்பு தொகை பெற்றது ) | | 1,00,000 | 1,00,000 |

26. <u>விஸ்வநாத் அறைகலன் வரையறு நிறுமத்தின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்</u>

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ( 30,000 x 2 ) ப<br>நேர்மைப் பங்கு விண்ணப்ப க/கு<br>( ₹. 2 வீதம் 30,000 பங்குகளுக்கான விண்ணப்பத் தொகை பெறப்பட்டது ) | | 60,000 | 60,000 |
| | நேர்மைப் பங்கு விண்ணப்ப க/கு ( 20,000 x 2 ) ப<br>நேர்மைப் பங்கு முதல் க/கு<br>( பங்கு விண்ணப்பத் தொகையை பங்கு முதலுக்கு மாற்றியது ) | | 40,000 | 40,000 |
| | நேர்மைப் பங்கு விண்ணப்ப க/கு ( 10,000 x 2 ) ப<br>வங்கி க/கு<br>( நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு பணம் திருப்பி அளிக்கப்பட்டது ) | | 20,000 | 20,000 |
| | நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டு க/கு ( 20,000 x 5 ) ப<br>நேர்மைப் பங்கு முதல் க/கு ( 20,000 x 3 )<br>பத்திர முனைமம் க/கு ( 20,000 x 2 )<br>( 20,000 பங்குகளுக்கான பங்கு ஒதுக்கீட்டுத் தொகை பங்கொன்று ₹. 3 வீதம், முனைமம் | | 1,00,000 | 60,000<br>40,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | ₹. 2 உள்பட பெறவேண்டியது ) | | | |
| | வங்கி க/கு ப<br>நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டு க/கு<br>( ஒதுக்கீட்டுத் தொகை பெற்றது ) | | 1,00,000 | 1,00,000 |
| | நேர்மை பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்பு க/கு ப<br>( 20,000 x 5 )<br>பங்கு முதல் க/கு<br>( பங்கு அழைப்பு தொகை பெற வேண்டியது ) | | 1,00,000 | 1,00,000 |
| | வங்கி க/கு ப<br>நேர்மை பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்பு க/கு<br>( பங்கு அழைப்பு தொகை பெற்றது ) | | 1,00,000 | 1,00,000 |

27. **சம்பத் நிறுமத்தின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ( 24,000 x 3 ) ப<br>நேர்மைப் பங்கு விண்ணப்ப க/கு<br>( விண்ணப்பத்தொகை பெற்றது ) | | 72,000 | 72,000 |
| | நேர்மைப் பங்கு விண்ணப்ப க/கு ( 24,000 x 3 ) ப<br>நேர்மைப் பங்கு முதல் க/கு<br>( பங்கு விண்ணப்பத் தொகையை பங்கு முதல் கணக்கிற்கு மாற்றியது ) | | 72,000 | 72,000 |
| | நேர்மை பங்கு ஒதுக்கீட்டு க/கு ( 24,000 x 4 ) ப<br>நேர்மைப் பங்கு முதல் க/கு<br>( ஒதுக்கீட்டுத் தொகை பெற வேண்டியது ) | | 96,000 | 96,000 |
| | வங்கி க/கு ப<br>நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டு க/கு<br>( ஒதுக்கீட்டுத் தொகை பெற்றது ) | | 96,000 | 96,000 |
| | நேர்மை பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்பு க/கு ப<br>(24,000 x 3)<br>நேர்மைப் பங்கு முதல் க/கு<br>( பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்பு தொகை பெற வேண்டியது ) | | 72,000 | 72,000 |
| | வங்கி க/கு ப<br>நேர்மைப் பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்புக/கு<br>( பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்பு தொகை பெற்றது ) | | 72,000 | 72,000 |



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

28.

## சரண்யா வரையறு நிறுமத்தின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ( 30,000 x 3 ) ப<br>நேர்மைப் பங்கு விண்ணப்ப க/கு<br>( விண்ணப்பத்தொகை பெற்றது ) | | 90,000 | 90,000 |
| | நேர்மை பங்கு விண்ணப்ப க/கு (20,000 x 3) ப<br>நேர்மைப் பங்கு முதல் க/கு<br>( பங்கு விண்ணப்பத் தொகையை பங்கு முதல் கணக்கிற்கு மாற்றியது ) | | 60,000 | 60,000 |
| | நேர்மை பங்கு விண்ணப்ப க/கு (10,000 x 3) ப<br>வங்கி க/கு<br>( மிகுதியான பங்கு விண்ணப்பத் தொகை திருப்பிச் செலுத்தியது ) | | 30,000 | 30,000 |
| | நேர்மை பங்கு ஒதுக்கீட்டு க/கு (20,000 x 4) ப<br>நேர்மைப் பங்கு முதல் க/கு<br>( ஒதுக்கீட்டுத் தொகை பெற வேண்டியது ) | | 80,000 | 80,000 |
| | வங்கி க/கு ப<br>நேர்மை பங்கு ஒதுக்கீட்டு க/கு<br>( ஒதுக்கீட்டுத் தொகை பெற்றது ) | | 80,000 | 80,000 |
| | நேர்மை பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்பு க/கு (20,000 x 3) ப<br>நேர்மை பங்கு முதல் க/கு<br>( பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்பு தொகை பெற வேண்டியது ) | | 60,000 | 60,000 |
| | வங்கி க/கு ப<br>நேர்மை பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்பு க/கு<br>( நேர்மை பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்பு தொகை பெற்றது ) | | 60,000 | 60,000 |

29.

## பாரடைஸ் வரையறு நிறுமத்தின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

### அ) பங்குகளை முகமதிப்பில் வெளியிடும் போது

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | அறைகலன் க/கு ப<br>சுகுனா நிறுவன க/கு<br>( அறைகலன் வாங்கியது ) | | 4,40,000 | 4,40,000 |
| | சுகுனா நிறுவன க/கு ப<br>பங்குமுதல் க/கு<br>( பங்கொன்று ₹. 10 வீதம் 44,000 முற்றிலும் செலுத்தப்பட்ட பங்குகளை வெளியிட்டது ) | | 4,40,000 | 4,40,000 |

### ஆ) பங்குகளை 10 % முனைமத்தில் வெளியிடும் போது

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | அறைகலன் க/கு ப<br>சுகுனா நிறுவன க/கு<br>( அறைகலன் வாங்கியது ) | | 4,40,000 | 4,40,000 |
| | சுகுனா நிறுவன க/கு ப<br>பங்குமுதல் க/கு (40,000 x 10 )<br>பத்திர முனைமம் க/கு (40,000 x 1 )<br>( பங்கொன்று ₹. 10 வீதம் 40,000 பங்குகள் 10% முனைமத்தில் வெளியிட்டது ) | | 4,40,000 | 4,00,000<br>40,000 |

## வெளியிடப்பட வேண்டிய பங்குகளின் எண்ணிக்கையைக் கணக்கிடல்

மொத்த தொகை = ₹. 4,40,000

பங்குகளின் முகமதிப்பு = ₹. 10

முனைமம் = 10 % ஆகையால், முனைமத் தொகை 10 x 10 % = ₹. 1

வெளியீட்டு விலை = முகமதிப்பு + முனைமம் = ₹. 10 + ₹. 1 = ₹. 11

வெளியிடப்பட வேண்டிய நேர்மைப் பங்குகளின் எண்ணிக்கை = $\frac{\text{மொத்த தொகை}}{\text{வெளியீட்டு விலை}}$ = $\frac{4,40,000}{11}$ = ₹. 40,000

www.Padasalai.Net